**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை : செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L. (Hons.), LL.M.,**

**நீதித்துறை நடுவர், தேவகோட்டை**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண். 165/2026**

1. சுப்பிரமணியன் (எ) சுப்பிரமணி

த/பெ. அடைக்கலம்

**........ மனுதாரர் / எதிரி**

**//எதிர் //**

அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

தேவகோட்டை நகர் காவல் நிலையம்,

குற்ற எண்: 20/2026

பிரிவு : U/s 303(2) BNS

**......... எதிர்மனுதாரர் / குற்ற முறையிடுபவர்**

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. கௌசல்யா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ......

**உத்தரவு**

1. மனுதாரரால் இந்த மனு பிணைகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் கடந்த 04/02/2026 முதல் நீதிமன்ற காவலில் இருக்கிறார் என்றும், மனுதாரர் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும் எனவே மனுதாரர் / எதிரியை நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

3. அரசுதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி / மனுதாரர் மீது தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண். 20/2026 U/s. 303(2) BNS என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் எதிரியை கைது செய்து விசாரித்தபோது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி வழக்கின் சம்பவ இடத்தில் இருந்த வண்டியில் ரூ.5,200/- இருந்ததாகவும் செலவு செய்தது போக மீதம் உள்ள தொகை ரூ.500 வீட்டில் இருப்பதாக கூறியதால் அதனை அத்தாட்சி மகஜர் தயார் செய்து வழக்கின் புலன்விசாரணை அதிகாரி கைப்பற்றியுள்ளதாகவும், எதிரியால் திருடப்பட்ட திருட்டுப்பணம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் புலன்விசாரணை நிலுவையில் உள்ளதால் எதிரியைப் பிணையில் விட கடுமையாக ஆட்சேபனை தெரிவித்து வாதிட்டார்.

4. இருதரப்பு வாதங்களையும் வழக்கு ஆவணங்களையும் பரிசீலித்து கருத்தில் கொண்டதில் மனுதாரர் / எதிரி கடந்த 04/02/2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மனுதாரர் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள், எதிர்மனுதாரரின் கூடுதல் பதிலுரையில் எதிரியால் திருடப்பட்ட பணம் கைப்பற்றப்பட்டுள்ளதாக

குறிப்பிட்டுள்ளதையும், வழக்கு விசாரணையின் பெரும்பகுதி நிறைவடைந்துள்ளதையும் கருத்திற்கொண்டு மனுதாரர் / எதிரியை பிணையில் விடலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே இம்மனு அனுமதிக்கப்பட்டு எதிரிக்கு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பிணை வழங்கப்படுகிறது.

**i. மனுதாரர் ரூ.10,000/-த்திற்கு இரு ஜாமீன்தாரர்களுடன் பிணைப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.**

**ii. மனுதாரர் BNSS பிரிவு 480(3)(a),(b),(c) ஆகியவற்றில் கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA
Digitally signed by POORNIMA
Date: 2026.03.17 17:00:54 +0530

நீதித்துறை நடுவர்,

தேவகோட்டை.